# யாத்ரா தானம்

யாத்ரா தானம் என்பது - எந்த வெளியூர் ப்ரயாணத்தின்போதும் செய்யலாம். பயணம் இடைஞ்சலின்றி, வெற்றிகரமாக முடிய, பயணம் புரப்பட்ட நேரத்தில் தோஷங்கள் இருந்தால் அவை பாதிக்காதிருக்க ஒரு மட்டைத் தேங்காயை பணத்துடன் தாம்பூலத்தில் வைத்து வைதீக முறைப்படி தானம் செய்து ஒரு ப்ராஹ்மணருக்குக் கொடுத்துவிட்டு பயணம் மேற்கொள்வதே யாத்ரா தானமாகும்.

கல்யாணத்தில் - பிள்ளையாத்துவாள் தங்கள் ஊரிலிருந்து பெண்ணினுடைய ஊருக்குச் சென்று கல்யாணம் செய்து கொள்ளச் செல்வதாலும் பழைய நாடகளில் வெளியூர் பயணங்கள் மிகவும் சிரமமான ஒன்று என்பதாலும் இதை அநுஷ்டானத்தில் கொண்டிருந்தனர். இக்காலத்தில் பயணங்கள் சுலபமானதாலும், பெரும்பாலும் தாங்கள் வசிக்கும் பட்டணத்திலேயே திருமணங்கள் செய்து கொள்வதால் யாத்ராதானம் மேற்கொள்வதில்லை.

கல்யாணத்துக்குப் புறப்படத் தயாரானதும், கல்யாணப் பிள்ளையை சந்தனம் பூசி, மாலையிட்டு அலங்கரித்து மணையில் ஆசமனம் செய்து, இரு பில் பவித்ரம் அணிந்து ஸேவித்து, "அசேஷே + ஸ்வீக்ருத்யா நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய கோத்ரஸ்ய மம உத்வாஹ யாத்ராரம்ப முஹூர்த்த லக்ன அபேக்ஷயா ஆதித்யாதீநாம் நவணாம் க்ரஹாணாம் சுபம் ஆநுகூல்ய ஸித்யர்த்தம், யே யே க்ரஹாஃ சுபஸ்தாநேஷு ஸ்திததாஃ யே யே க்ரஹாஃ சுப இதர ஸ்தாநேஷு ஸ்திதாஸ்ச்ச தேஷாம் க்ரஹாணாம் சுபம் ஆநுகூல்ய ஸித்யர்த்தம், ஆதித்யாதி நவக்ரஹ தேவதாஃ ப்ரீதி த்வாரா பகவத் ப்ரீத்யத்ரத்தம் யத்கிஞ்சித் ஹிரண்யதானம் கர்த்தும் யோக்யதாஸித்திம் அநுக்ரஹாணா" என்று அநுஜ்ஞை பண்ணிக்கொண்டு மணையில் அமர்ந்து ப்ராணாயாமம் ஓம் அஸ்மத்குருப்யோ முதல் தமாச்ரயே வரை சொல்லி விஷ்வக்ஸேந ஆராதனத்திற்கு ஸங்கல்பம் பண்ணிக்கொண்டு, விஷ்வக்ஸேநரை ஆவாஹனம் பண்ணி ஆராதனம் பண்ணி, மேற்படி நக்ஷத்ரே ராசௌ முதல் யத்கிஞ்சித் ஹிரண்யதானம் கரிஷ்யே வரை சொல்லி ஸ ங்கல்பம் பண்ணிக்கொண்டு, விஷ்வக்ஸேநரை உத்வாஸனம் பண்ணி, சந்தனம் பூசி, பெரியவாளிடம் அக்ஷதை கொடுத்து ஆசீர்வாதம் பெற்று, பின் வெத்திலைபாக்கில் பணமும், மட்டைத் தேங்காயும் வைத்து "ஹிரண்ய கர்ப கர்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோஃ அநந்த புண்ய பலதம் அதஸ்சாந்திம் ப்ரயச்சமே, நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய, கோத்ரஸ்ய சர்மணஃ மம உத்வாஹ யாத்ராரம்ப முஹூர்த்த லக்ன அபேக்ஷயா ஆதித்யாதீநாம் நவனாம் க்ரஹாணாம் சுபம் ஆநுகூல்ய ஸித்யர்த்தம் ஆதித்யாதி நவக்ரஹ தேவதா ப்ரீதி த்வாரா பகவத் ப்ரீத்யர்த்தம் யத்கிஞ்சித் ஹிரணம்யம் ஸ்ரீ வைஷ்ணவாய (ப்ராஹ்மணாய) ஸம்ப்ரததே நமஃ நமம அச்யுதஃ ப்ரீயதாம்" என்று தத்தம் செய்து, ஒரு ப்ராஹ்மணருக்குக் கொடுத்துவிட்டு, எல்லோருக்கும் அக்ஷதை கொடுத்து ஒரு பஞ்சாதி ஸ்வஸ்தி சொல்லி ஆசீர்வாதம், எல்லோருக்கும் தாம்பூலம் கொடுத்து, ஹாரத்தி எடுக்கச் சொல்லி ஸேவித்துவிட்டு, பெருமாளையும் ஸேவித்துவிட்டு, எல்லோரும் வேனிலோ காரிலோ ஏரியதும் ஒரு தேங்காயை த்ருஷ்டி சுற்றி சிதற உடைத்து விட்டு பயணம் தொடங்கவேண்டும்.

yathra-dhanam.indd 1 5/19/2011 5:02:16 PM